ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ செங்கமலம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ செங்கமலம் ॥

## திருவழுந்தூர் - 4

‡செங்கமலத் திருமகளும் புவியும் செம் பொன்⋆
திருவடியின் இணை வருட முனிவர் ஏத்த⋆
வங்கமலி தடங்கடலுள் அனந்தன் என்னும்⋆
வரியரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின்⋆
எங்குமலி நிறை புகழ் நால் வேதம்⋆ ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை⋆
அங்கமலத்தயன் அனையார் பயிலும் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (1)

முன் இவ்வுலகேழும் இருள் மண்டியுண்ண⋆
முனிவரொடு தானவர்கள் திகைப்ப⋆ வந்து
பன்னு கலை நால் வேதப் பொருளை எல்லாம்⋆
பரி முகமாய் அருளிய எம்பரமன் காண்மின்⋆
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச்⋆ சங்கம்
அவை முரலச் செங்கமல மலரையேறி⋆
அன்னம் மலி பெடையோடும் அமரும் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (2)

குலத்தலைய மத வேழம் பொய்கை புக்குக்⋆
கோள் முதலை பிடிக்க அதற்கனுங்கி நின்று⋆
நிலத்திகழும் மலர்ச் சுடரேய் சோதீ! என்ன⋆
நெஞ்சிடர் தீர்த்தருளிய என் நிமலன் காண்மின்⋆
மலைத்திகழ் சந்தகில் கனகமணியும் கொண்டு⋆
வந்துந்தி வயல்கள்தொறும் மடைகள் பாய⋆
அலைத்துவரும் பொன்னி வளம் பெருகும் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (3)

சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம்⋆
திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி⋆
இலங்குபுவி மடந்தை தனை இடந்து புல்கி⋆
எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன் காண்மின்⋆
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க⋆
பொழில்கள் தொறும் குயில் கூவ மயில்கள் ஆல⋆
அலம்புதிரைப் புனல் புடை சூழ்ந்தழகார் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (4)

சினமேவும் அடலரியின் உருவமாகித்⋆
திறல் மேவும் இரணியனதாகம் கீண்டு⋆
மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி
மாள⋆ உயிர் வவ்விய எம்மாயோன் காண்மின்⋆
இனமேவு வரி வளைக்கை ஏந்தும் கோவை⋆
ஏய்வாய மரகதம்போல் கிளியினின் சொல்⋆
அனமேவு நடை மடவார் பயிலும் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (5)

வானவர் தம் துயர் தீர வந்து தோன்றி⋆
மாண் உருவாய் மூவடி மாவலியை வேண்டி⋆
தான் அமர ஏழுலகும் அளந்த வென்றித்⋆
தனி முதல் சக்கரப் படை என் தலைவன் காண்மின்⋆
தேன் அமரும் பொழில் தழுவும் எழில் கொள் வீதிச்⋆
செழு மாட மாளிகைகள் கூடந்தோறும்⋆
ஆனதொல் சீர் மறையாளர் பயிலும் செல்வத்து⋆
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (6)

பந்தணைந்த மெல் விரலாள் சீதைக்காகிப்⋆
பகலவன் மீதியங்காத இலங்கை வேந்தன்⋆
அந்தமில் திண் கரம் சிரங்கள் புரண்டு வீழ⋆
அடு கணையால் எய்துகந்த அம்மான் காண்மின்⋆
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்⋆
திசைமுகனே அனையவர்கள் செம்மை மிக்க⋆

அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (7)

கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
    பறித்து⋆ மழ விடையடர்த்துக் குரவை கோத்து⋆
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சி வைத்த
    தயிர் வெண்ணெய்⋆ உண்டுகந்த மாயோன் காண்மின்⋆
செம்பவள மரகதம் நல் முத்தம் காட்டத்⋆
    திகழ் பூகம் கதலி பல வளம் மிக்கெங்கும்⋆
அம்பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்தழகார் செல்வத்து⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (8)

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்⋆
    ஒண் கரியும் உருள் சகடும் உடையச் செற்ற⋆
நீடேறு பெருவலித் தோள் உடைய வென்றி⋆
    நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன் காண்மின்⋆
சேடேறு பொழில் தழுவும் எழில் கொள் வீதித்⋆
    திருவிழவில் மணியணிந்த திண்ணை தோறும்⋆
ஆடேறு மலர்க் குழலார் பயிலும் செல்வத்து⋆
    அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே (9)

‡பன்றியாய் மீனாகி அரியாய்ப்⋆ பாரைப்
    படைத்துக் காத்துண்டுமிழ்ந்த பரமன் தன்னை⋆
அன்றமரர்க்கதிபதியும் அயனும் சேயும்
    அடி பணிய⋆ அணியழுந்தூர் நின்ற கோவை⋆
கன்றி நெடுவேல் வலவன் ஆலி நாடன்⋆
    கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்⋆
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார்⋆
    ஒலி கடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖